**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 1
Defence
Court

Name : சக்திபாண்டியன்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 24th August 2021.

முதல் விசாரணை:

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் டீக்கடை வைத்திருந்தேன். இந்த வழக்கில் இறந்து போன சேகர், சுரேஷ், செந்தில் ஆகியோர் என்னுடைய உடன் பிறந்த சகோதரர்கள். மேற்படி மூன்று நபர்கள் எப்படி இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது. புகார் நான் கொடுக்கவில்லை, புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கும் என் தம்பி குமார்பாண்டியனுக்கும் த.மு.மு.க கட்சியை சேர்ந்தவர்களுக்கும் தென்காசி பஜாரில் பள்ளிவாசல் கட்டுவது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது அதனால் 17.12.2006 ம் தேதியில் என் தம்பி

குமார்பாண்டியனை த.மு.மு.க கட்சியை சேர்ந்தவர்களான ஹனிபா, முருகேசன் என்ற அப்துல்லா, சையது சுலைமான் ஆகியோர் சேர்ந்து கொலை செய்துவிட்டார்கள். என் தம்பி குமார்பாண்டியனை கொலை செய்த வழக்கில் ஹனிபா, முருகேசன் அப்துல்லா, சையது சுலைமான் ஆகியோர்கள் ஜாமீனில் வெளியே வந்து விட்டார்கள். அதில் ஹனிபாவும், முருகேசன் என்ற அப்துல்லாவும் தினசரி தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டு வந்தார்கள். 14.08.2007 காலை 10.15 மணிக்கு நான் TN72 Z 9757 என்ற அம்பாசிட்டர் காரில் செந்தில், கபிலன், மற்றும் என் மைத்துனர் சுப்பிரமணி, சுரேந்திரன், ஆகியோருடன் என் தம்பி ரவியின் கேபிள் டி.வி ஆபிசிலிருந்து காரில் வந்தோம். காரை நான் ஓட்டி வந்தேன். போலீஸ் விசாரணையில் தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரிகள் கையெழுத்து போட்டு வரும் போது போகும்போது LRS பாளையம், ஜங்சன் ரோடு, கூளக்கடை பஜார் முத்தாரம்மன் கோவில் பக்கம் வரும் போது மேற்கிலிருந்து வரும் போது எதிரில் பார்த்த யமாஹா TN 72 X 0558 என்ற பைக்கில் தென்காசியை சேர்ந்த மீரான் மைதீன் மகன் அலாவூதினும் பின்னால் வந்த அலாவூதின் தம்பி ஹனிபாவும் கருப்பையா பிள்ளை மகன் முருகேசன் என்ற அப்துல்லாவும், பீர் முகம்மது மகன் அபு அயூப்பும், அன்சாரி முகைதீன் மகன் ராஜா அன்சாரியும், ஆகியோர்கள் எல்லாம் என் காரில் மோதுவது போல் வந்து வழி மறித்தார்கள் என்றும், நான் போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால், சரியல்ல. நாங்கள் பயந்து போய் காரை விட்டு இறங்கி ஓட போன போது எங்கள் காருக்கு பின்னால் இருந்து தென்காசியில் பொதிகை மெடிக்கல் வைத்திருக்கும் பொன்னிபாளையத்தில் இருக்கும் சம்சுதீன், சுலைமான் மகன் பசுதுலீன், மீரான் மைதீன் மகன் முகமது மகன் ஹனிபா, மரைக்காயர் பள்ளி வாசல் தெருவை சேர்ந்த முகமது சாயூப் மகன் மேசாக் என்ற இஸ்மாயில் ஆகியோர்கள் கத்தி, வெட்டருவாள் ஆயுதங்களுடன் எங்களை வழிமறித்தார்கள் என்றும் அப்போது என்னுடன் வந்தவர்களும் கூளக்கடையில் பஜாரில் இருக்கும் முத்துடீக்கடை பக்கம் உள்ள தங்க நகைக்கடை பக்கம் நின்றுகொண்டிருந்த எங்களுடைய ஆட்களும், ஆட்டோவில் பைக்கிலும் வந்தவர்களுடன் பயங்கர மோதல் நடந்தது என்றும், அப்போது என் தம்பி செந்தில் என்ற செந்தில்குமார் என்பவரை தென்காசி மவுண்ட் ரோடு மீரான் மைதீன் மகன் அலாவூதின்

அருவாளால் தலையில் இடது பக்கம் காதோடு சேர்த்து இரண்டு வெட்டு வெட்டினார் என்றும், பின்பும் வலது கண் புருவத்தின் மேல் வெட்டினார் பிறகு முகைதீன் மகன் நவாஸ் அருவாளால் செந்தில் வயிற்றில் வலது பக்கமும், சுலைமான் சேட் அவர் அருவாளால் செந்தி லின் இடது தோள்பட்டையில் வெட்டியும், ஹைதர் அலியின் மகன் நாகூர் மீரான் அருவாளார் செந்திலின் இடது கையில் மாறி மாறி வெட்டினார் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால், சரியல்ல. சுரேஷ் என்பவரை பஷீர் அருவாளால் வலது கை மணிக்கட்டிலும், மார்பிலும் வெட்டினார், சையது அலி சுரேசை முகத்தோடு சேர்த்து பட்டாக்கத்தியில் வெட்டினார் என்றும், மீரான் மைதீன் அருவாளால் சுரேஷின் கழுத்தில் வெட்டினார் என்றும், ஹனிபா என்ற நகூர் ஹனிபா அருவாளால் சேகரில் தலையில் ஐந்து இடத்தில் வெட்டினார் என்றும், அபு ஆயுப் அன்சாரி அருவாளால் சேகரின் வலது முழங்கையில் வெட்டினார் என்றும், இடது விலாவில் மாறி மாறி வெட்டியும், அசன்கனி சேகரின் வலது கை கக்கத்திற்கு கீழ் கத்தியால் குத்தியும், ராஜா முகமது அருவாளால் வலது காதுக்கு கீழும், வலது உள்ளங்கையிலும் மாறி மாறி வெட்டினார் என்று நான் போலீசார் விசாரைணயில் சொல்லியிருக்கிறேன் என்றால், சரியல்ல. காயம்பட்ட என் தம்பி செந்திலை தென்காசி அரசு மருத்துவமனைக்கு முதல் சிகிச்சைக்காக கொண்டு போய் மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை டி.வி.எம்.சி மருத்தவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், என் தம்பி சேகரும், சுரேசும் சம்பவ இடத்தில்வெட்டி கொலை செய்யப்பட்டு இறந்து விட்டார்கள் என்றும், என் தம்பி செந்தில் சிகிச்சை பலனளிக்காமல் டி.வி.எம்.சி மருத்துவமனையில் வைத்து இறந்துவிட்டார் என்றும், இச்சம்பவம் முழுவது தென்காசி கூளக்கடை பஜாரில் பலசரக்கு கடை வைத்திருக்கும் வி.டி.எஸ். ரகுமான் பாட்சாவும், தென்காசியில் காஜி முஸ்தபா ஜவுளி கடை வைத்திருக்கும் கமால் ஆகிய இருவரின் துண்டுதலின் பேரில் தான் சம்பவம் நடந்தது என்றும் போலீஸ் விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேன் என்றால், சரியல்ல. தற்போது உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. காவல் ஆய்வாளர் என்னை விசாரணையின் போது மேற்சொன்ன சம்பவங்களை நான் சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர் என்பதால் நானும் எதிரிகளும் சமதானம் ஆகிவிட்டு உண்மைக்கு மாறாக அரசு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை